Paper ID: IC29

# ‘‘முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் செல்வாக்கு - ஓர் இஸ்லாமிய நோக்கு’’ (புல்மோட்டைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு)

**[1]MY. Jameela & [2]AHM. Isfar**

Jameelafathima053@gmail.com & Isfar1020@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

‘‘முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் செல்வாக்கு - ஓர் இஸ்லாமிய நோக்கு’’ (புல்மோட்டைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு) எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் நோக்கமானது புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் போக்கு, சீதனம் செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்கள், அது சமுகத்தில் ஏற்படுத்துகின்ற பிரச்சினைகள் போன்றவற்றை இணங்கண்டு சீதனத்தின் போக்கு பற்றி இஸ்லாத்தின் அடிப்படையில் நோக்குவதுடன் அதற்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்மொழிவதாகும். அளவு சார், பண்பு சார் ஆய்வு முறையில் அமைந்த இவ்வாய்வுக்காக முதலாம் நிலைத் தரவுகளாக நேர்காணல், கலந்துரையாடல், அவதானம் என்பவற்றினூடாக தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இரண்டாம் நிலைத்தரவுகளானது நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள் என்பவற்றின் மூலம் திரட்டப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தின் போது சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்வதற்கான காரணங்களுள் முறையற்ற சொத்துப் பங்கீடு, இறையச்சமின்மை, வறுமை, அந்நிய கலாசார தாக்கம், கல்வி நிலை விருத்தி, இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் போன்றன பிரதானமாக உள்ளது. புல்மோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் 95 வீதமான திருமணங்களில் சீதனம் பெறப்படுகிறது. இதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதை அவதானிக்கலாம். குடும்பங்களுக்கிடையில் பிளவு ஏற்படல், மனைவி கணவனுக்கு கட்டுப்படாத நிலை, விவாகரத்து இடம்பெறல், பொருளாதாரப் பிரச்சினைகள், வாரிசுரிமைச் சொத்துக்களை முறையாகப் பங்கிட முடியாமை, இஸ்லாமிய வழிகாட்டல்கள் புறக்கணிக்கப்படல் போன்றன முக்கிய பிரச்சனைகளாக காணப்படுகின்றன. ஏனவே புல்மோட்டைப் பிரதேசத்தில் சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்கின்றமை, அதற்கான காரணிகள் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளது. எனவே புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களிடம் சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், சீதனம் தொடர்பான இஸ்லாத்தின் கருத்து நிலைகளை தெளிவுபடுத்துவதற்கும், எதிர்காலத்தில் சீதனம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வோருக்கும் இவ்வாய்வு பயனுடையதாக அமையும்.

**திறவுச் சொற்கள்:-** முஸ்லிம் திருமணம், சீதனம், மஹர்

## ஆய்வுப் பின்னணி

உலகில் எத்தனையோ மதங்கள் உள்ளன. அவை திருமணமில்லாமல் வாழும் துறவு வாழ்க்கையைப் போற்றுகின்றன. அதை நற்செயல் என்றும் கூறுகின்றன. அவ்வாறு வாழ்வோரை உத்தம துறவிகள் என்றும் வர்ணிக்கின்றன. அவற்றுக்கு மத்தியில் இஸ்லாம் திருமணத்தை ஆதரிக்கிறது. திருமண வாழ்வைப் புகழ்கிறது. திருமணம் செய்வதை நற்செயல் என்றும் உறுதிப்படுத்துகிறது.

திருமண நடைமுறைகள் இஸ்லாம் அனுமதித்த முறையில் நடைபெறுகின்ற போது நிம்மதியான மகிழ்ச்சிகரமான குடும்பம் உருவாவது இயல்பானதாகும். எனினும் திருமண நடைமுறைகளில் இஸ்லாம் அங்கீகரிக்காத ஒரு விடயம் புகுத்தப்படுமாக இருந்தால் நிச்சயமாக அது மனித நலன்களுக்கு எதிரானதாகவே அமையும் என்பது திண்ணம். இவ்வாறு அந்நியர்களின் கலாச்சாரத்திலிருந்து இஸ்லாத்திற்குள் ஊடுருவிய விடயமாக காணப்படும் சீதனமும் தற்கால இஸ்லாமிய திருமணங்களில் ஒரு சவாலாகவே காணப்படுகின்றது

சீதனமானது முஸ்லிம் திருமணத்தில் அந்நிய கலாச்சாரத்திலிருந்து புகுந்து கொண்ட ஒரு நடைமுறையாகும். இதனால் தான் அது எல்லோராலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் ஆய்வுப் பிரதேசமான புல்மோட்டைப் பிரதேசத்திலும் இதன் செல்வாக்கானது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றதுடன், இப்பிரதேச முஸ்லிம்களிடையே சர்ச்சைக்குரிய மற்றும் அங்கீகரிக்கத்தக்க விடயமாகவும் மாறியுள்ளதையும் காணலாம்.

அன்று தொடக்கம் இன்று வரை சமூகத்தில் காணப்படுகின்ற சீதனக் கொடுக்கல் வாங்கல் கலாச்சாரமானது அச்சமூகத்தில் வாழ்கின்ற சந்ததிகளிடம் வலுவாகப் பின்னிப்பிணைக்கப்பட்ட ஒரு சமூகக் காரணியாகவும், சமூகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் ஒரு சடங்கு முறையாகவும் காணப்படுகின்றது.

இப்பிரச்சினை காரணமாக ஆண், பெண், பெற்றோர்கள், குடும்பத்தினர் உட்பட சமூகத்திலுள்ள அனைவரும் பாதிக்கப்படுவதோடு தனிமனித குடும்ப சமூகக் கட்டமைப்பும் சீரழிகின்றது. இந்நிலமையினையே ஆய்வுப் பிரதேச சமூக அமைப்பில் காணக்கூடியதாக உள்ளது.

இதனாலேயே தான் புல்மோட்டைப் பிரதேசத்தில் வாழும் முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் போக்கினை இணங்கண்டு, அது பற்றி ஆராய்வதோடு அதற்கான ஆலோசனைகளையும் இஸ்லாத்தின் வழி நின்று முன்மொழிவதாகவும், புல்மோட்டைப் பிரதேசத்தை மையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வைப் பொருத்தமட்டிலும் பிரதான நோக்கமாக இருப்பது புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தில் சீதனத்தின் போக்கினை இணங்கானுவதாகவே அமைந்துள்ளது. அத்துடன் பின்வரும் துணை நோக்கங்களும் காணப்படுகின்றது.

- ✓ சீதனம் செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்கள், அது சமுகத்தில் ஏற்படுத்துகின்ற பிரச்சினைகள் போன்றவற்றை இணங்கானல்.
- ✓ சீதனத்தை ஒழிப்பதற்கான ஆலோசனைகளையும் தீர்வுகளையும் முன்மொழிதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

சீதனக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிந்து அவற்றின் தற்கால நிலைப்பாட்டை மதிப்பிடுதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களினைப் பயன்படுத்தி அளவுசார் மற்றும் பண்புசார் ஆய்வுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல் (Interview), கலந்துரையாடல் (Discussion)இ அவதானம் (Observation) போன்றவற்றின் மூலம் பெறப்பட்டுள்ளன.

காழி நீதிபதி, விவாகப்பதிவாளர், 05 ஊரின் முக்கிய பிரமுகர்கள், 10 கொள்கை வாதிகள் போன்றோர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். ஆய்வுப் பிரதேச காழி நீதிபதி பதவியைக் கொண்டும், ஆய்வுப் பிரதேச விவாகப் பதிவாளர் பதவியைக் கொண்டும், ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ள ஊரின் பிரமுகர்கள் அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையிலும், கொள்கை வாதிகள் அவர்களின் மார்க்க அறிவினைக் கொண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறு எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட மாதிரித் தொகையானது ஆய்வினை சரியான முறையில் பூர்த்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்கள் ஊரின் முக்கிய நபர்கள், பொதுமக்களுடனான கலந்துரையாடல்கள் மூலமாகவும் ஆய்வுப் பிரதேசத்தில் இடம் பெற்ற திருமணங்களின் போது வழங்கப்பட்ட சீதனக் கொடுக்கல் வாங்கல்களை அவதானித்தல் மூலமாகவும் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள், குச்சவெளி பிரதேச செயலக அறிக்கைகள், விவாகப் பதிவுகள் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளானது நுஒஉடந தரவுப் பொதியைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**பிரதான கண்டுபிடிப்புக்கள்**

ஆய்வுப் பிரதேசத்தில் முஸ்லிம்களின் திருமணத்தின் போது சீதனத்தின் போக்கு அதிகரித்து காணப்படுகின்றமை ஆய்வின் மூலம் கணள்டறியப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகள் கடந்த 2010-2016 வரையான ஆறு வருட காலப்பகுதிகளில் தொடர்ந்தேச்சையாக அதிகரித்துக் கொண்டு சென்றுள்ளமை தெளிவாகின்றது.

இப்பிரதேச முஸ்லிம்களின் திருமணத்தின் போது இடம்பெறும் சீதனம் செல்வாக்குச் செலுத்துவதற்கான காரணங்கள் அதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் சீதனம் இப்பிரதேசத்தில் தொடர்ந்திருப்பதற்கு வழிகோலியுள்ள காரணங்கள் என்பன கண்டறியப்பட்டுள்ளன.

**சீதனம் செல்வாக்குப் செலுத்துவதற்கான காரணங்கள்**

1. முறையற்ற சொத்துப்பங்கீடு
2. இறையச்சமின்மை
3. அந்நிய கலாச்சாரத் தாக்கம்
4. சமூக அந்தஸ்து
5. கல்வி நிலை விருத்தி
6. இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்
7. உளவியல் ரீதியான தாக்கம்
8. தொழிலின்மை
9. வறுமை
10. பிரதேச மரபாகப் பின்பற்றல்

**சீதனத்தால் ஏற்படும் பிரச்சினைகள்**

1. குடும்பங்கிடையில் பிளவு ஏற்படல்
2. மனைவி கணவனுக்கு கட்டுப்படாத நிலை ஏற்படல்
3. ஆண்களுக்கு சுமை ஏற்படல்
4. பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லல்

5. விவாகரத்து இடம்பெறல்
6. பொருளாதாரப் பிரச்சினைகள்
7. சாதாரண வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட மக்களால் சீதனத்தைக் கொடுக்க முடியாத நிலை ஏற்படல்
8. வாரிசுரிமைச் சொத்துக்களை முறையாகப் பங்கிட முடியாமை
9. கலாச்சாரம் ரீதியான பிரச்சினைகள்
10. இஸ்லாமிய வழிகாட்டல்கள் புறக்கணிக்கப்படல்
11. உளவியல் ரீதியான பிரச்சினைகள்

**சீதனம் இப்பிரதேசத்தில் தொடர்ந்திருப்பதற்கு வழிகோலியுள்ள காரணங்கள்**

1. ஆய்வுப் பிரதேச மக்களிடையே இஸ்லாம் பற்றிய தெளிவின்மை
2. மக்கள் தொடர்ந்தும் பாரம்பரிய இஸ்லாமியப் போக்கையே கடைபிடிக்கின்றமை
3. மக்களிடையே இஸ்லாமிய அமுலாக்கம் போதாமை
4. இஸ்லாமிய சமூகக் கூட்டுப் பொறுப்பின்மை
5. இஸ்லாமிய புத்தெழுச்சிவாதக் கருத்துக்கள் புல்மோட்டைப் பிரதேச மக்களை போதியளவு சென்றடையாமை
6. சீதனம் பற்றிய இஸ்லாமிய விழிப்புணர்ச்சிகள் அரிதாக மேற்கொள்ளப்பட்டமை
7. இப்பிரதேச முஸ்லிம்களிடத்தில் இஸ்லாமியப் பற்றுதல் குறைவாகக் காணப்படுகின்றமை.

**சீதனத்தின் அண்மைக் காலப் போக்குகள்**

புல்மோட்டைப் பிரதேசத்தில் சீதனத்தின் போக்கானது காலத்துக்குக் காலம் புதிய வடிவம் பெற்று அதிகரித்துச் சென்றுள்ளதை அவதானிக்க முடிந்தது.

**2010-2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைபெற்ற 400 திருமணங்களில் வழங்கப்பட்ட சீதனங்களின் விபரம்**

| ஆண்டு | பணம் | வீடு | குாணி | வாகனம் | கடை | வயற்காணி |
|---|---|---|---|---|---|---|
| 2010-2011 | 14 | 75 | 93 | 30 | 10 | 45 |
| 2011-2013 | 17 | 86 | 89 | 74 | 05 | 28 |
| 2013-2014 | 10 | 83 | 90 | 25 | 08 | 40 |
| 2014-2016 | 18 | 92 | 94 | 86 | 06 | 52 |

மூலம்: பிரதேச செயலகம், விவாகப் பதிவு இடாப்பு, குச்சவெளி

அந்த வகையில் ஆய்வுக்காக பெறப்பட்ட சீதனம் தொடர்பான ஆறு வருட தரவுகளுக் கேற்ப ஆரம்ப காலத்தில் குறிப்பாக 2010-2011, 2011-2014 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பணம் குறைவாக பெறப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்களாகிய வீடு, காணி என்பன அதிகமாகப் பெறப்பட்டுள்ளன. எனினும் எல்லா ஆண்டுகளிலும் வீடு, காணி என்பன சீதனமாக பெறப்பட்டுள்ளன என்பதுடன் இப்பிரதேச ஆண்கள் திருமணத்தின் பின் தமது மனைவிமார்களின் வீடுகளிலே தங்கி வாழ்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இஸ்லாம் திருமணத்தின் போது மஹரை முக்கியப்படுத்தியுள்ளதுடன் அதை திருமணத்தின் ஓர் அங்கமாகவும் குறிப்பிடுகின்றது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை பொறுத்த வரையில் மஹர் தொகையானது சமூக வழக்கப்படி குறிப்பிட்ட தொகையாகவே வழங்கப்படுகிறது. இன்னும்

அத்தொகையானது குறிப்பிட்டதொரு அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். ஆய்வுப் பிரதேச மஹறின் அளவு பற்றி பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்துகின்றது.

**2010-2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைபெற்ற 400 திருமணங்களில் வழங்கப்பட்ட மஹர் பற்றிய விபரம்**

| ஆண்டு | 1500 க்கும் குறைவான தொகை மஹராக பெறப்படும் திருமணங்களின் எண்ணிக்கை | 5000 க்கும் குறைவான தொகை மஹராக பெறப்படும் திருமணங்களின் எண்ணிக்கை | 10000 க்கும் அதிகமான தொகை மஹராக பெறப்படும் திருமணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2010-2011 | 75 | 15 | 10 |
| 2011-2013 | 70 | 20 | 10 |
| 2013-2014 | 65 | 23 | 12 |
| 2014-2016 | 60 | 25 | 15 |

மூலம்: பிரதேச செயலகம், விவாகப் பதிவு இடாப்பு, குச்சவெளி

மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுகின்றன என்பதுடன் அவற்றிற்கான காரணங்களாக குடும்பம், சமூக அந்தஸ்து, கல்வி நிலை விருத்தி, தொழிலின்மை, முறையற்ற சொத்துப்பங்கீடு, இறையச்சமின்மை, அந்நிய கலாச்சார தாக்கம், இஸ்லாத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் என்பன ஒன்றோடொன்று தொடர்புபட்டவையாகவும் அமைந்துள்ளன. இறையச்சமின்மை, அந்நிய கலாச்சாரத்தாக்கம் என்பன இஸ்லாமிய வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதற்கு தடையாக அமைந்துள்ளதுடன் சமூக அந்தஸ்து, கல்வி நிலை விருத்தி, தொழிலின்மை போன்றன சீதனம் பெறத் தூண்டும் அதேவேளை முறையற்ற சொத்துப்பங்கீட்டுக்குக் காரணமாக அமைகின்றது. இக்காரணங்களினால் ஏற்படும் சீதனக் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளுக்கு அடிப்படையாக குடும்பம் பரிணமிக்கின்றது.

எனவே, புல்மோட்டைப் பிரதேசத்தில் சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்துச் செல்கின்றமை அதற்கான காரணிகள் அவர்களின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு கண்டறியப்பட்டுள்ளது.

**முன்மொழிவுகளும், சிபாரிசுகளும்**

- ✓ முதலாவதாக அனைத்து தரப்பினர் மத்தியிலும் திருமண நடைமுறைகள் அவற்றின் முக்கியத்துவம், மஹறின் அவசியம் தொடர்பான விழிப்புணர்வுகளை மஸ்ஜிதுகள் மத்ரஸாக்கள், மார்க்க விளக்க வகுப்புக்கள், பாடசாலைகள் போன்றவற்றில் வழங்குவதன் மூலமாக ஆய்வுப் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் அதிகரித்து வரும் சீதனக் கொடுக்கல் வாங்கல்களை குறைக்க முடியும்.
- ✓ இப்பிரதேச முஸ்லிம்களின் செயற்பாடுகள் இஸ்லாத்தோடு தொடர்பு பட்டதாக காணப்படாமையினாலே இப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே ஊர் ஜமாஅத்தினர் இது தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் மஹர் தொகையை கணிசமான அளவாக பெண்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.
- ✓ சீதனம் என்ற கொடிய பழக்கத்தை சமூகத்தின் அடிமட்டத்திலிருந்து அகற்றுவதற்கான குறுகிய,

நீண்டகாலத் திட்டங்களை ஏற்பாடு செய்தல். இதில் ஒவ்வொரு தனிமனிதனும் உணர்வு பூர்வமாக இணைந்து செயற்படல் வேண்டும்.

- ✓ பருவவயதை அடையும் இளைஞர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி சீதனம் பெறல் தவிர்க்கப்பட வேண்டிய விடயம் என்பதை இஸ்லாமிய பொருளாதார அடிப்படையில் விழிப்புணர்வு அறிவூட்டல் வகுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு கற்பிக்கப்படல்.
- ✓ ‘‘சீதனம் ஒழிப்பு’’ எனும் பொதுநல அமைப்பொன்றை ஏற்படுத்தல். இது கல்விமான்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைக்கப்படல்.
- ✓ குறிப்பிட்ட பொதுநல அமைப்பின் செயற்றிட்டங்களுடாக சீதனம் பெறல் இஸ்லாமியத் திருமணத்தில் இல்லை என்ற இஸ்லாமிய அறிவு வயது வந்த இளைஞர்கள் அனைவருக்கும் கற்பிக்கப்படல் வேண்டும்.
- ✓ மேற்கூறப்பட்ட அறிவூட்டல் வகுப்பு வாரத்தில் ஒரு நாள் அல்லது இரு நாட்களும் ஒரு மணிநேரம் கொண்ட வகுப்பாக ஏற்பாடு செய்து குறைந்த பட்சம் 6 மாதங்கள் வரையாவது நடாத்தப்படல் வேண்டும்.
- ✓ குறிப்பிட்ட போதனா வகுப்பில் குடும்பத்திலுள்ள வயது வந்த இளைஞர்கள் ஒவ்வொருவரும் இணைந்து கற்பது கட்டாயமாக்கப்படல். இதில் தாய், தந்தையர்கள் பொறுப்புணர்வுடன் பிள்ளைகளை பங்குபற்றச் செய்தல் வேண்டும்
- ✓ இப்பயிற்சி வகுப்பில் இணைந்து கற்கும் இளைஞர்களுக்கு பயிற்சி முடிவில் சான்றிதல் வழங்கப்படல்
- ✓ இச்சான்றிதழ் திருமண நிகழ்வில் தகுதியான ஆவணமாக கருதப்படல் வேண்டும். அல்லது திருமணத்தின் போது அதற்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும்.
- ✓ மேலும் திருமணம் செய்து கொடுப்பதற்கு வசதியற்ற குடும்பங்களிலுள்ள பிள்ளைகளை காலத்துக்குக் காலம் கணிப்பீடு செய்து இவர்களுக்கு உதவும் செயற்றிட்டமொன்றைத் தயாரித்தல்.
- ✓ ‘‘இஸ்லாமியத் திருமண உதவி நிதியம்’’ ஒன்றை ஏற்பாடு செய்து வசதிபடைத்தவர்கள், நலன்விரும்பிகள், வெளிநாடுகளில் தொழில்புரியும் நலன்விரும்பிகளிடமிருந்து நிதி உதவிகளைப்பெற்று அதனை வங்கியில் வைப்புச்செய்து, இணங்காணப்பட்ட வறுமைக்குடும்பத்திலுள்ள ஆண், பெண் இரு தரப்பினருக்கும் திருமண ஏற்பாடுகளுக்கான அடிப்படைச் செலவுகளுக்கு நிதி உதவி வழங்கல்.
- ✓ ஜமாஅத்களில் தலைமைப் பொறுப்பேற்று ஊழியம் செய்பவர்கள் தங்களுக்கு இறைவன் அளித்த அதிகாரத்தைப் பயன்படுத்தி சீதனம் போன்ற அந்நிய மதக்கலாச்சாரங்களை மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். சீதனக் கொடுக்கல் வாங்கல் விடயங்களில் ஈடுபடுவோரை ஜமாஅத்தின் கடுமையான தண்டனைக்குரிய குற்றவாளியாக அறிவிக்க வேண்டும்.
- ✓ இஸ்லாமிய அமைப்புக்கள் ஒரே விடயத்தை திரும்பத்திரும்ப பேசுவதைத் தவிர்த்து சமூகப் பிரச்சினைகளுள் ஒன்றான சீதனத்தையும் தம் கவனத்தில் கொண்டு வர வேண்டும். ஜும்மா போன்ற அரிய சந்தர்ப்பங்களில் சமுதாயத்தில் பின்னடைவை ஏற்படுத்தும் சீதனம், ஆடம்பரத்திருமணம், ஒற்றுமையின்மை போன்ற தீமைகளை எடுத்துரைத்து சீதனத்திற்கு முன்னுரிமை அளிப்பதால் மஹரின் மகிமையும் அதன் முக்கியத்துவமும் இல்லாமல் செய்யப்படுவதுடன் இஸ்லாமிய வழிகாட்டல்கள் புறக்கணிக்கப்பட்டு விடும் என்பதை மக்கள் மனதில் பதியச்செய்ய வேண்டும்.

- ✓ ஈமானிய உணர்வை ஒவ்வொரு மக்களிடத்திலும் ஏற்படுத்த வேண்டும்.
- ✓ இச் சீதனக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு ஆண், பெண் ஆகிய ஒவ்வொருவரும் ஒத்துழைப்பதுடன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதை சொல்லளவில் மாத்திரமின்றி நடைமுறை வாழ்விலும் செயற்படுத்திக் காட்ட முடியும்.
- ✓ சீதனம் வாங்கி நடைபெறும் திருமண விருந்தில் கலந்து கொள்வதை ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் முற்று முழுதாக புறக்கணிக்க வேண்டும்.

**முடிவுரை**

இவ்வாலோசனைகளை புல்மோட்டைப் பிரதேச முஸ்லிம்கள் தமது வாழ்வில் உள்வாங்குவார்களாயின் எதிர்காலத்தில் தூய இஸ்லாமியக் குடும்பத்தின் வாயிலாக சீதனக் கொடுக்கல் வாங்கல்கள் அற்ற சமூகத்தினை உருவாக்குவதுடன் இஸ்லாமிய நெறிமுறைகளை கடைபிடித்தொழுகும் இளைய சந்ததியினர்களை வளர்த்தெடுக்கலாம்.

**உசாத்துணைகள்**

**நூல்கள்**

1) இஹ்ஸான், 2008, ''நபி வழியில் திருமணம்'', கொழும்பு: பண்டாரநாயக்க மாவத்தை.
2) முபாறக்.எம்.எஸ்.எம்.,2005, ''கல்யபணக் கடைத்தெரு'', மருதமுனை: மகாமின் அமீன் பப்ளிகேஷன்.
3) பிஸ்மில்லாஹ் கான். கே.கே., 2004, ''வரதட்சணையை ஒழிப்போம்'', சென்னை: சாஜிதா புக் செண்டர்.
4) ஸைனுத்தீன் பரீத்.எஸ்., 2009, ''சீதனம்'', சென்னை: சாஜிதா புக் சென்டர்.
5) பாத்தி முத்து சித்தீக்,1999, ''நல்ல வாழ்க்கைக்கு வல்லவன் காட்டிய வழி'', பாமு பதிப்பகம்.
6) ஆப்துல் அஸீஸ்,2004, ''உறவுகளும் உரிமைகளும்'', சென்னை: இஸ்லாமிக் பௌன்டஷன் ட்ரஸ்ட்.

**சஞ்சிகைகள்**

1) சுஹீரா.எம்.வை.எம்., 2004, ''முறையற்றசொத்துப் பங்கீடும் சமூகச் சிதைவுகளும்''இதுயரி, இதழ்-5, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்: தமிழ்ச் சங்கம்.
2) ஹைருன்னிஸா.எம்.எல்., 2011, ''சீதனம் சீரழிக்கிறது'', உண்மை உதயம், உண்மை-57, உதயம்-163, பரகஹதெனிய: ஜமாஅத் அன்ஸாரிஸ் சுன்னதில் முஹம்மதிய்யா. பக்.47-50
3) இக்வான் அமீர்,2006, ''வரதடசணையின் கோரமுகம் விலை பொருளா பெண்கள்?'', சமரசம், பக்.12-13
4) ஹுஸைன் பாகவி, 2006, ''வரதட்சணைக்கான தீர்வுகள்'', சமரசம், பக்.14-15
5) பாத்திமா ஜெஸீலா,2000, ''பெண்களை வதைக்கும் வரத்சணை!''இ அல்ஹஸனாத், இதழ்-6, மலர்- 26, கொழும்பு: இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, பக்.23
6) அகார் முஹம்மது. ஏ.சீ.,1996, ''சன்மார்கக் சட்டவிளக்கங்கள்'',

7) "திருமணங்கள் தாமதமாவதேன்?", 2005, அல்ஹஸனாத், இதழ்-4, மலர்- 31, கொழும்பு: இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி,

**நேர்காணல்**

1) காழி நீதிபதி,(2015), புல்மோட்டை.
2) வகாப். எம்.ஏ.,(2015), முன்னால் விவாகப் பதிவாளர், பள்ளி நிருவாக சபை உறுப்பினர்,
3) கலீல்.ஏ.எல்.,(2015), விவாகப் பதிவாளர், பள்ளி நிருவாக சபை உறுப்பினர்,